**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மேட்டூர்**

**முன்னிலை**: N.கோபாலகிருஷ்ணன்,B.Sc.,B.L., நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.
புதன்கிழமை, 2026ம் வருடம் ஜூலை மாதம் 08–ம் தேதி

**பல்வகை மனு எண்.2/2026 (CC No.137/2026)**

முத்துசாமி, (49/2026) த/பெ. மாதேஷ் **....மனுதாரர்/எதிரி**

**–எதிர்–**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,
கொளத்தூர் காவல் நிலையம்,
**குற்றஎண்.4/2026, ச/பி–296(பி), 115(2), 351(3), 74 of BNS, 4(1)(j) TNP Act.**

**.......எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்**

**<u>உத்தரவு</u>**

1. இந்த வழக்கானது ச/பி– **296(பி), 115(2), 351(3), 74 of BNS, 4(1)(j) TNP Act** கீழ் குற்ற எண்.4/2026 என்ற எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் மனுதாரர் கைது செய்யப்பட்டு கடந்த 07.01.2026–ஆம் தேதி முதல் இன்று வரை கடந்த **182** நாட்களாக நீதிமன்ற காவலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

2. மேற்படி இந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இந்த வழக்கின் நிகழ்நிலைப் புகார்தாரர் அ.சா.1 சரோஜா என்பவர் கடந்த 07.05.2026–ஆம் தேதி விசாரணை செய்யப்பட்டுள்ளார். அதன்பின்னிட்டு மற்ற சாட்சிகளை விசாரணை செய்ய பல வாய்ப்புகள் வழங்கப்பட்டும் இதுவரை சாட்சிகள் யாரும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

3. மேலும் மனுதாரர்/எதிரி இந்த நீதிமன்றத்தின் ஆள்வரைக்குட்ப்பட்ட பகுதியில் நிரந்தர குடியிருப்பு உள்ளதாகவும், இனிமேற்கொண்டு தனது மனைவியான அ.சா.1 சரோஜா என்பவருடன் எந்த பிரச்சனையும் செய்ய மாட்டேன் என்று உறுதியளித்துள்ளார். மேலும் தன்னுடைய மனைவியே தன் மீது புகார்

கொடுத்துள்ளதால் தன்னை பிணையில் எடுக்க ஆட்களும், போதிய நிதிவசதி இல்லாத காரணத்தாலும் தான் தொடர்ந்து சிறையில் இருந்து வருவதாக தெரிவிக்கிறார்.

4. மேற்படி வழக்கு விசாரணையில் எந்த வித முன்னேற்றமும் ஏற்படாத சூழ்நிலையில் எதிரியை தொடர்ந்து நீதிமன்ற காவலில் வைத்திருப்பதில் எந்த வித பயனும் இருக்கபோவதில்லை என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

ஆகவே, மனுதாரர் கடந்த 182 நாட்கள் சிறையில் இருப்பதை கருத்தில் கொண்டும், நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவித்துள்ளதை கருத்தில் கொண்டும், குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டும், எதிரியை கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் சொந்த பிணையில் விடுவதே உகந்தது என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

i. **மனுதாரர் ரூ.10,000/-க்கான இந்த நீதிமன்றம் திருப்தி அடையும் வகையில் பிணையப்பத்திரம் இந்த நீதிமன்றம் முன்பாக எழுதிக்கொடுக்க வேண்டும்.**

ii. **மனுதாரர் பிணையில் விடுவிக்கப்பட்ட பிறகு, 30 நாட்கள் தினமும் காலை 10 மணிக்கு கொளத்தூர் காவல் நிலையத்தில் ஆஜராகி கையொப்பமிடவேண்டும்.**

iii. **மேலும் இனிமேற்கொண்டு இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.**

iv. இந்த நீதிமன்ற விசாரணைக்கு தவறாமல் நேரில் ஆஜராக வேண்டும். இந்த வழக்கின் சாட்சிகளுக்கு எந்தவித மிரட்டலோ, அச்சுருத்தலோ அல்லது ஆசைவார்த்தை கூறி சாட்சிகளை கலைக்க முயற்ச்சிக்கக் கூடாது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்தர்க்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இன்று 08.07.2026-ஆம் தேதி பகரப்பட்டு என் கையொப்பமும், நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

NAGARAJAN GOPALAKRISHNAN

Digitally signed by NAGARAJAN GOPALAKRISHNAN
Date: 2026.07.08 18:54:51 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1, மேட்டூர்.**